Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | | |
|---|---|---|---|
| Calendar .. .. | } | | |
| Miscellaneous .. .. | } | | |
| Preliminary Register .. .. | } | **S.C. 297/2022** | |
| Sessions .. .. | } | | |
| | } | Prosecution | – **PW 10** |
| Deposition of witness for | } | Defence | – |
| | } | Court | – |

| | | |
|---|---|---|
| Name | : | முத்துக்குமார் |
| Father/Husband Name | : | சுப்பையா |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | தலைமை காவலர் |
| Religion | : | |
| Age | : | 46 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.12.2025

எதிரி ஆஜர்

**முதன்மை விசாரணை:–**

நான் தற்போது கேணிக்கரை காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 18.07.2021ம் தேதி தேவிப்பட்டிணம் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்த போது மேற்படி காவல் நிலைய குற்ற எண். 228/2021 சட்டப்பிரிவு 302 இதச வழக்காக பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை மற்றும் அசல் புகாரை துரித தபாலாக பெற்று இராமநாதபுரம் நீதித்துறை நடுவர் எண். 1 அவர்களிடம் அதிகாலை 5 மணியளவில் ஒப்படைத்தேன். இது சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை –

தேவிப்பட்டிணம் காவல் நிலையத்திற்கும் இராமநாதபுரம் நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றத்திற்கும் 15 கி.மீ தூரம் இருக்கும். முதல் தகவல் அறிக்கையினை நீதித்துறை நடுவரின் வீட்டில் ஒப்படைத்தேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரிக்கும்போது முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் புகார் மனுவின் அசலை நீதித்துறை நடுவர் வீட்டில் தான் ஒப்படைத்தேன் என்று சொன்னேனா என்றால் சொன்னேன். நீதித்துறை நடுவரிடம் ஒப்படைப்பதற்கு காவல் ஆய்வாளர் எனக்கு கடவு சீட்டு வழங்கினாரா என்றால் வழங்கினார். அந்த கடவுச்சீட்டில் எத்தனை மணிக்கு முதல் தகவல் அறிக்கை மற்றும் புகார் மனுவின் அசல் ஒப்படைக்கப்பட்டது என நீதித்துறை நடுவர் மேற்குறிப்பு செய்து கொடுத்தாரா என்றால் கொடுத்தார். அந்த கடவுச்சீட்டை காவல் ஆய்வாளரிடம் ஒப்படைத்தேனா என்றால் ஒப்படைத்தேன்.

Sd/-சி.மோகன்ராம்,

கூடுதல் மாவட்ட நீதிபதி,

இராமநாதபுரம்.